பக்கங்கள்:07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 21 சனிக்கிழமை 06.09.2025 கதிர் 300

## இது ரகசியம் அல்ல!

டிஜிட்டல் இந்தியா திட்டம் போன்று இலங்கையிலும் டிஜிட்டல் மயமாக்கல் திட்டம் குறிப்பாக நிதிக் கையாளுகைகளை டிஜிட்டல் மயமாக்கும் ☞2



### குவியலாகக் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகள் நடுவே

# சம்மணமிட்டு அமர்ந்த நிலையில் மீட்கப்பட்ட மனித எலும்பு எச்சம்

### செம்மணியில் நேற்றும் பரபரப்பு

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியின் ஒரு பகுதியான அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயான மனிதப் புதைகுழிகளில் இருந்து நேற்று கால்கள் சம் மணமிட்டு அமர்ந்த நிலையில் என்புக்கூட்டுத் தொகுதி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.வியாழக்கிழமை குவியலாகக் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூட்டுத் தொகுதியில் ஓரமாக்கக் காணப்பட்ட மண்டையோட்டுப் பகுதியை மீட்ப தற்கான முயற்சிகளின்போதே நேற்றையதினம்அமர்ந்திருந்த ☞2

## செம்மணி – 240

செம்மணிமனிதபுதைகுழியில்இருந்துநேற்றுப் புதிதாக5எலும்புக்கூடுகள்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதேநேரம் 11 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.



செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வுப் பணிகள் ஓகஸ்ட் 25 தொடங்கிய நிலையில் நேற்றுத் தொடர்ச்சியாக 12ஆவது நாளாகவும் ☞2

# ஒற்றையாட்சியைப் பாதுகாத்த படையினரை சர்வதேசத்தில் காட்டிக்கொடுக்க முயற்சியாம்

### அழுது வடிகிறார் விமல் வீரவன்ஸ

நாட்டின் ஒற்றையாட்சி மற்றும் இறையாண்மையை பாதுகாத்த அரச படையினரை சர்வதேச மட்டத்தில் காட்டிக் கொடுப்பதற்கு ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகத்தை உருவாக்குவதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவின் ஊடாக அரசபடையினர் இலக்கு வைக்கப்படுவார்கள் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார். ☞3

## ஆளும்தரப்பை எதிர்த்துச் செயற்படுவோம் மின்சார சபை தொழிற்சங்கம் அறிவிப்பு

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளை ஆளும்தரப்பு தன்னிச்சையான முறையில் மேற்கொள்கிறது. மின்சார சபையை மறுசீரமைத்து புதிதாக உருவாக்கப்படும் ☞3

### கச்சதீவுக்குச் செல்வதை விட்டுவிட்டு

# இஸ்ரேல் போர்க் குற்றவாளிகள் உலவும் அறுகம்பை சென்று உண்மையை அறிக

### அநுரவுக்கு முஜிபுர் ரஹ்மான் அறிவுரை

இஸ்ரேலின் போர்க் குற்றவாளிகள் நாட்டுக்கு வருகின்றனர். நாட்டின் எதிர்காலத்துக்கு அச்சுறுத்தலைஏற்படுத்தும்வகையில்அருகம்பை பிரதேசத்தில் இஸ்ரேலியர்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் குறித்து ஆளும்தரப்பு அவதானம் செலுத்தவேண்டும். எனவே யாருமற்ற கச்சதீவுக்குச் செல்வதை விடுத்து அருகம்பை மற்றும் வெலிகம பிரதேசங்களுக்கு ☞2

### வெளித் தலையீடுகள் முற்றாக நிராகரிப்பு

# சீர்திருத்தங்களைச் செயற்படுத்த அவகாசம் கேட்கிறது இலங்கை

### ஐ.நா. மனித உரிமைகள் உயராணையரின் அறிக்கைக்கு பதிலளிப்பு

இலங்கையில் சீர்திருத்தங்களை அமல்படுத்துவதற்குத்தனக்குப்போதுமான கால அவகாசம் தரப்படவேண்டும் என்று இலங்கை அரசு வலியுறுத்தியுள்ளது. அத்தோடு, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர் ☞3

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியா அளவிற்குத் தீவிரமாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவில்லை என்றாலும் அந்தத் துறையில் ஓரளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வங்கிக் கையாளுகைகளில் டிஜிட்டலின் பங்கு கணிசமாக உயர்ந்துள்ளது.

யார் எல்லாம் டிஜிட்டல் இலங்கைத் திட்டத்தைப் பயன்படுத்தினார்களோ இல்லையோ பொலிஸார் அதனை நன்கு பயன்படுத்திக்கொண்டார்கள் என்று தெரியவந்திருக்கிறது. நேற்று கொழும்பில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். வீதிச் சோதனை நடவடிக்கையின்போது மாட்டிக்கொண்ட மூவரிடம் அவர்களது வங்கிக் கணக்கிலிருந்து டிஜிட்டல் முறையில் (அலைபேசிகள் வழியாக) பணத்தைப் பெற்றிருக்கிறாராம் இந்தக் கான்ஸ்டபிள். அதுவும் ஒரு தடவை அல்ல. சில நாள்களுக்குள்ளேயே மூன்று தடவைகள் இப்படி அவர் பணத்தைப் பெற்றிருக்கிறாராம்.

ஓகஸ்ட் 8 புறக்கோட்டைப் பகுதியிலும் ஓகஸ்ட் 20 லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கு முன்பாகவும், ஓகஸ்ட் 27 பாலதக்ஷ மாவத்தையிலும் சாலைகளில் பயணித்த வாகனங்களைத் தடுத்து நிறுத்தி உரிய ஆவணங்கள் இல்லாத வாகன உரிமையாளர்களைப் பலவந்தப்படுத்தி டிஜிட்டல் சிறீலங்கா மூலம் பணத்தைப் பெற்றிருக்கிறாராம் இந்தக் கான்ஸ்டபிள்.

கொழும்பு தலைமையகப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவரே இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவருக்கு உதவினார்கள் என்று கூறப்படும் வேறு சிலரையும் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் முடுக்கி விட்டிருக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட போலீஸ் கான்ஸ்டபிளுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டு, அவரை பணியில் இருந்து இடைநீக்கம் செய்யவும் மூத்த போலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. எது எப்படியோ டிஜிட்டல் சிறீலங்காவை நேர் வழியில் பயன்படுத்துவதற்கு முன்னர் இப்படிப்பட்ட குறுக்கு வழியில் பயன்படுத்துவதற்குப் பலர் இருக்கிறார்கள் போலும்.

இந்த டிஜிட்டல் சிறீலங்கா வந்த பின்னர் அடிக்கடி தமது வங்கிக் கணக்குகளில் இருந்து சிறு சிறு தொகைகள் காணாமல் போகின்றன என்ற குற்றச்சாட்டுக்களும் அதிகரித்து வருகின்றன என்பதும் கவனிக்கப்படவேண்டியதே..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சம்மணமிட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலையில் காணப்பட்ட இந்த எலும்புக்கூடு மீட்கப்பட்டது.

சிந்துப்பாத்தி மயானப் புதைகுழிகளில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் 44ஆவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. 43ஆவது நாளில் ஒரேயிடத்தில் 8 எலும்புக்கூடுகள் குவியலாக்கக் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அவற்றை அகற்றும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. அதில் ஒரு எலும்பு எச்சத் தொகுதியே கால்கள் சம்மணமிட்டு அமர்ந்த நிலையில் புதைக்கப்பட்டிருந்தது.

227ஆவது எலும்புக்கூடு என இலக்கமிடப்பட்ட இந்த என்புத் தொகுதி மட்டும் மற்றைய எலும்புக்கூடுகள் காணப்பட்டதிலிருந்து மாறுபட்ட வகையில் புதைக்கப்பட்டமைக்கான காரணத்தைக் கண்டறிவதற்கு அகழ்வாய்வாளர்கள் முயற்சி எடுத்தனர்.

இது தொடர்பில் தெளிவான விளக்கத்தைப் பெற யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை மூத்த விரிவுரையாளர் ரமணராஜா புதைகுழிப் பகுதிக்கு அழைக்கப்பட்டார், இந்து மதச் சடங்குகளுடன் முறையாக அடக்கம் செய்யப்பட்ட சடலத்தின் எலும்புக்கூடாக அது இருப்பதற்கான சாத்தியங்கள் இருக்குமா என்பது தொடர்பில் அவரிடம் கருத்துக் கேட்கப்பட்டது.

அவர் தனது அவதானிப்பின்படி, மேற்படி மனித என்புத் தொகுதி இந்து முறைப் படி முறையாக அடக்கம் செய்யப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை எனத் தெரிவித்தார். என்புக்கூட்டின் கைகள் காணப்படும் முறை உள்ளிட்ட பல காரணிகளையும் பார்க்கும்போது அது முறையாக அடக்கம் செய்யப்பட்ட என்புக்கூடு இல்லை என்பது தெளிவாகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

அதையடுத்து அது தொடர்பான விவரமான அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ். மேலதிக நீதிவான் லெனின்குமார் உத்தரவிட்டார்.

இதேவேளை, செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் அனுமதித்த 45 நாள்கள் இன்று சனிக்கிழமையுடன் நிறைவு பெற வுள்ள நிலையில், அடுத்த வழக்கு விசா ரணைகள் தொடர்பில் இன்று நீதிவான் திகதியிடுவார் என்று சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

## இஸ்ரேல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சென்று உண்மையை அறியுமாறு அரசுத் தலைவர்யிடம் கேட்டுக் கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்காவை மகிழ்ச்சிப்படுத்து வதற்காகவே இஸ்ரேலுக்கு இலவச வீசா வழங்கினர். முழு உலகமும் இஸ்ரேலை புறக்கணிக்கும் இந்த சந்தர்ப்பத்தில் இலங்கை இவ்வாறு செயற்படுவதிலிருந்து ஆளும்தரப்பின் நோக்கம் தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது. தமிழ் நாட்டில் முதன் முறையாக தேர்தலில் போட்டியிடும் நடிகர் விஜய் கூறியதை பெரிதாக எடுத்துக் கொண்டு அரசுத் தலைவர் கச்சதீவுக்கு சென்றிருக்கின்றார். உண்மையில் யாருமற்ற கச்சதீவுக்கு செல்வதை விட அருகம்பை மற்றும் வெலிகமவுக்கு செல்லுமாறு அரசுத் தலைவர்யிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

இஸ்ரேலின் போர்க் குற்றவாளிகள் அருகம்பை பிரதேசத்தைக் கைப்பற்றியுள்ளனர். நாட்டில் இஸ்ரேலியர்களின் செயற்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. சுற்றுலாப் பயணிகள் எனக் கூறிக் கொண்டு நாட்டுக்கு வருபவர்கள் பெண்களையும் சிறுவர்களையும் தாக்குகின்றனர். நாட்டின் எதிர்காலத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் அருகம்பை பிரதேசத்தில் இஸ்ரேலியர்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் குறித்து ஆளும்தரப்பு அவதானம் செலுத்த வேண்டும். அவர்களது நடவடிக்கைகள் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவுள்ளன.

இஸ்ரேலின் போர்க் குற்றவாளிகள் நாட்டுக்கு வருகின்றனர். பலஸ்தீனில் சிறுவர்களையும் பெண்களையும் ஊடகவியலாளர்களையும் கொன்று குவித்தவர்; சுற்றலாப்பயணிகளைப்போன்று இலங்கையில் குடியேறிக் கொண்டிருக்கின்றனர். இவற்றை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசுத் தலைவர்யிடம் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியிருந்த நிலையில், அது முடிவடைய இன்னும் ஒரு நாள் மட்டுமே எஞ்சியிருக்கின்றது.

அதேவேளை முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களில் இதுவரையில் 53 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுபணிகளின்போது 235 எலும்புகூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. 240 எலும்புக்கூட்டு தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



# அமெரிக்க அழுத்தத்தால் சீன மாநாடு புறக்கணிப்பு

## அணி சேராக் கொள்கையிலிருந்து ஆளும்தரப்பு விலகுவதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

'பொருளாதார அபிவிருத்தி மற்றும் உலக அமைதி' என்ற தொனிப்பொருளில் சீனாவில் இடம்பெற்ற மாநாட்டை ஆளும்தரப்பு புறக்கணித்துள்ளது. அமெரிக்காவின் அழுத்தத்தின் காரணமாகவே அரசுத் தலைவரோ அல்லது அமைச்சர்களோ இதில் கலந்துகொள்ளவில்லை. அணிசேரா வெளிநாட்;டு கொள்கையிலிருந்து ஆளும்தரப்பு விலகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கான பொருளாதார நலன்கள் இழக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பொருளாதார அபிவிருத்தி மற்றும் உலக அமைதி' என்ற தொனிப்பொருளில் சீனாவில் ஆகஸ்ட் 31 செப்டெம்பர் 1ஆம் திகதி வரை மாநாடொன்று இடம்பெற்றது. இந்த மாநாட்டில் உலகில் பலவந்த நாடுகள் பலவும் பங்கேற்றன.

அத்தோடு 10 நாடுகள் அந்த மாநாட்டில் நிரந்தர அங்கத்துவத்தையும் பெற்றுள்ளன. அத்தோடு 25 நாடுகள் பேச்சாளராகவும் பங்கேற்கின்றன. 1999இல் இந்த மாநாடு ஆரம்பமானது. 2009ஆம் ஆண்டிலிருந்து இலங்கை இம்மாநாட்டில் பங்கேற்று வருகிறது. ஆனால் இம்முறை இலங்கையில் சார்பில் எவரும் பங்கேற்கவில்லை.

இம்மாநாட்டில் பங்கேற்பதை இலங்கை நிராகரித்துள்ளதாக லங்கா கார்டியன் இணையதளம் தெரிவித்துள்ளது. வெளியக அழுத்தம் காரணமாகவே இலங்கை இந்த மாநாட்டை நிராகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள சீனத் தூதரகமும், பீஜிங்கிலுள்ள இலங்கை தூதரகமும் இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு வெளிவிவகார அமைச்சிற்கு அறிவித்திருந்தன.

அரசுத் தலைவர் அநுரகுமார நேரமில்லாததால் இந்த மாநாட்டுக்கு செல்லவில்லை என அமைச்சரவை பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு அழைப்பு கிடைக்கவில்லையா எனச் செய்தியாளர்கள் கேட்டபோது, அதனை வெளிவிவகார அமைச்சரிடமே கேட்க வேண்டும் என்றும் பதிலளித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் விவகாரங்களைத் தவிர ஏனைய அனைத்தையும் அரச பேச்சாளர் அறிவார். இந்தியா, பாக்கிஸ்தான், நேபாளம் உள்ளிட்ட தென்னாசிய நாடுகள் அனைத்தும் இதில் பங்கேற்றன.

இந்த ஆளும்தரப்பின் அயலுறவுக் கொள்கை என்ன? இந்த ஆட்சியாளர்கள் எதிர்க்கட்சியிலிருந்தபோது அப்போதைய ஆட்சியாளர்கள் அனைவரும் அமெரிக்க ஆதரவாளர்கள் என விமர்சித்தனர். வல்லரசுகள் கூறுவதற்கமையவே அவர்கள் செயற்படுவார்கள் என்றும் விமர்சித்தனர். ஆனால் அந்த அரசாங்கங்கள் அனைத்தும் இவ்வாறான மாநாடுகளை புறக்கணிக்காது அவற்றில் பங்கேற்று நாட்டுக்கு உதவிகளைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தன. யாரும் அமெரிக்காவுக்கு பயந்து எந்தவொரு மாநாட்டிலும் பங்கேற்றாமல் இருக்கவில்லை.

அவ்வாறெனில் அநுர ஆளும்தரப்பு ஏன் இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை? சீனாவைப் போன்று ஒரு கட்சி ஆட்சியை அங்கீகரிக்கும் ஜே.வி.பி. செயலாளர் டில்வின் சில்வாவின் கட்சி அமைத்துள்ள அரசாங்கத்திலுள்ளோர் இதனைப் புறக்கணித்துள்ளனர். அமெரிக்காவின் அழுத்தத்தின் காரணமாகவே இலங்கை இம்மாநாட்டில் பங்கேற்கவில்லை என்பதே தற்போது கிடைத்துள்ள தகவலாகும். அரசுத் தலைவர் கச்சதீவுக்கு செல்வதை மாத்திரமே காணக்கூடியதாக இருந்தது. அதைத் தவிர அவர் நேரமற்ற வகையில் எந்தவொரு முக்கிய நிகழ்வுகளிலும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

அரசுத் தலைவர்க்கு செல்ல முடியாவிட்டால் அயலுறவுத்துறை அமைச்சர் அல்லது வேறு அமைச்சர்கள் பங்கேற்றிருக்க முடியுமல்லவா? அல்லது குறைந்தபட்சம் பீஜிங்கிலுள்ள இலங்கை தூதுவரையாவது பங்குமற்றுமாறு ஆலோசனை வழங்கியிருக்கலாமல்லவா? அணிசேரா வெளிநாட்;டு கொள்கையிலிருந்து இவர்கள் விலகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கான பொருளாதார நலன்கள் இழக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது நாட்டுக்கு பெரும் இழப்பாகும். இதேபோன்றுதான் இவர்கள் பிரிக்ஸ் மாநாட்டையும் புறக்கணித்தனர்.

இவர்களது அயலுறவுக் கொள்கை என்ன என்பது யாருக்கும் புரியவில்லை. இந்தியாவுடனும் சீனாவுடனும் ஒப்பந்தம் கையெழுத்திடுகின்றனர். ஆனால் அவற்றைப் பகிரங்கப்படுத்தவில்லை. மறுபுறம் ரஷ்யர்களுக்கு இலவச வீசாவை வழங்குகின்றனர். அதிகாரத்துக்கு வர முன்னர் அமெரிக்காவை எதிர்த்தவர்கள் இன்று அந்நாட்டின் சகாக்களாகியுள்ளனர். இது ஜே.வி.பி.க்கு பாதிப்பல்ல, ஆனால் நாட்டுக்கு பெரும் பாதிப்பாகும் என்றார்.

# குஷ் போதைப் பொருளுடன் இந்தியர் ஒருவர் நேற்று கைது

100 மில்லியன் ரூபாக்கும் அதிகமான மதிப்புள்ள குஷ் போதைப்பொருள் தொகையுடன் இந்திய பிரஜை ஒருவரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் நேற்றுக் காலை சுமார் 7.45 மணியளவில் ஏர் இந்தியா விமானம் ஏ.ஐ-277 மூலம் நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

குறித்த நபரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட சுமார் 10.75 கிலோகிராம் எடையுள்ள குஷ் போதைப்பொருளின் மொத்த மதிப்பு 105 மில்லியன் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமான நிலைய சுங்க வளாகத்தில் சமீபத்தில் நிறுவப்பட்ட அதிநவீன ஸ்கேனரைப் பயன்படுத்தி இந்தப் குஷ் போதைப்பொருள் தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆளும்தரப்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனத்துக்கு செல்லுங்கள் அல்லது 50 இலட்சம்நட்டஈடுபெற்றுக்கொண்டுசேவையில் இருந்து சுய விருப்பத்துடன் விலகுங்கள் என்று ஆளும்தரப்பு அறிவித்துள்ளது. ஆளும்தரப்பின் முறையற்ற செயற்பாட்டுக்கு எதிராக செயற்படுவோம் என இலங்கை மின்சார சபை சுதந்திர சேவை சங்கத்தின் செயலாளர் பிரபாத் பிரியந்த தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள இலங்கை மின்சார சபைசுதந்திரசேவைசங்கத்தின்பணியிடத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

புதிய மின்சாரசபை சட்டத்தின் பிரகாரம் மின்சார சபையை 4 தனியார் நிறுவனங்களுக்குவேறுப்படுத்தஆளும்தரப்பு உத்தேசித்துள்ளது. இதற்கு நாங்கள் ஒருபோதும்இடமளிக்கப்போவதில்லை.மின் கட்டமைப்பில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் 21கோரிக்கையை மின்சாரத்துறை அமைச்சின் செயலாளரிடம் முன்வைத்துள்ளோம். இதுவரையில் சாதகமான பதில் கிடைக்கவில்லை.

மின்சாரத்துறை கட்டமைப்பில் ஆளும்தரப்பு எடுக்கும் தன்னிச்சையான தீர்மானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து வியாழக்கிழமை நள்ளிரவு முதல் சட்டப்படி வேலையில் ஈடுபட்டுள்ளோம். எமது இந்தத் தீர்மானத்துக்கு ஆளுங்கட்சியின் தொழிற்சங்கங்களைத் தவிர்த்து ஏனைய தொழிற்சங்கத்தினர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள்.

எதிர்வரும் 16 ஆம் திகதி வரை சட்டப்படி வேலையில் ஈடுபடுவோம். அதற்கு பின்னர் சட்டப்படி வேலையில் இரண்டாம் கட்ட நடவடிக்கையில் ஈடுபடு வோம்.இக்காலப்பகுதியில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு சாதகமான தீர்வு கிடைக்காவிடின் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு பின்னர் தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம். இந்தத் தீர்மானத்தைமின்சாரத்துறைஅமைச்சுக்கும்இ தொழில் அமைச்சுக்கும் எழுத்துமூலமாக அறிவித்துள்ளோம்.

தோழிற்தொழிற்சங்கத்தினருடன்எவ்வித பேச்சுவார்த்தையிலும் ஈடுபடாமல் தான் ஆளும்தரப்பு இந்த மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்கிறது. இலங்கை மின்சார சபையைமறுசீரமைத்துஅதன்சேவைகளை 4 நிறுவனங்களுக்கு பன்முகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு புதிதாக உருவாக்கப்படும் நிறுவனத்துக்கு செல்லுமாறு இலங்கை மின்சார சபையின் ஒரு பிரிவின் சேவையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு செல்வதாயின் அந்த தீர்மானத்தை இரண்டு மாதத்துக்குள் அறிவிக்குமாறும் செல்ல விருப்பமில்லையாயின் 50 இலட்சம் ரூபாய் நட்டஈடு பெற்றுக்கொண்டு சேவையில் இருந்து சுய விருப்பத்துடன் விலகுமாறு ஆளும்தரப்பு அறிவுறுத்தியுள்ளது.

50 இலட்சம் ரூபாய் நட்டஈட்டை பெற்றுக்கொண்டுசேவையில்இருந்துஎவரும் விலகப் போவதில்லை. ஆளும்தரப்பின் முறையற்ற செயற்பாட்டுக்கு எதிராகத் தொடர்ந்து போராடுவோம். முன்வைத்துள்ள கோரிக்கைக்கு எதிர்வரும் 21ஆம் திகதிக்குள் தீர்வு கிடைக்காவிடின் முழுமையான பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றார்.

## ஒற்றையாட்சியைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் பணியிடத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் வருடாந்தக் கூட்டத்தொடர் எதிர்வரும்8ஆம்திகதிஆரம்பமாகவுள்ளது.இந்த பின்னணியில்ஆளும்தரப்புஇரண்டுபிரதான அறிவிப்புக்களை விடுத்துள்ளது.

அரசுத்தலைவர் அநுரகுமார திசாநாயக்க வடக்கு மாகாணத்துக்கு சென்று குறிப்பிட்ட விடயங்கள் அவதானத்துக்குரியன. இனவாதத்துக்கு இடமில்லை என்று அரசுத் தலைவர் குறிப்பிடுகிறார். வடக்குக்கு சென்றால் மாத்திரம்தான் இனவாதம் பற்றி அரசுத் தலைவர்க்கு நினைவுக்கு வரும்.

தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத் துவதற்கு சர்ச்சைக்குரிய தீர்மானங்களை எடுப்பதற்கும்பின்வாங்கபோவதில்லைஎன்று அரசுத் தலைவர் வடக்கில் குறிப்பிட்டுள்ளார். அந்த சர்ச்சைக்குரிய தீர்மானங்கள் என்னவென்பதை வெளிப்படுத்த வேண்டும்.

வடக்கில் இனவாதத்தை தோற்றுவிக்க தெற்கில் ஒருதரப்பினர் செயற்படுகின்றனர் என்று அரசுத் தலைவர் குறிப்பிடுகிறார். இந்த நாட்டில் வடக்கில்தான் இன்றும் இனவாதம் மற்றும் இனவாத முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஏனைய பகுதிகளில் இனவாத செயற்பாடுகள் ஏதும் கிடையாது.

வடக்கில் திஸ்ஸ விகாரைக்கு எதிராக அங்கு உள்ள இனவாதிகள் செயற்படும் போது அவர்கள் கைது செய்யப்படவில்லை. வடக்கில் பௌத்த மரபுரிமைகள் திட்டமிட்ட வகையில்அழிக்கப்படும்போது அதற்குஎதிராக ஆளும்தரப்பு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

வடக்கில் இனவாத செயற்பாடுகளுக்கும், பௌத்த மரபுரிமைகளுக்கும் எதிரான செயற்பாடுகளுக்கு இடமளித்து விட்டு, போரை முடிவுக்கு கொண்டு வந்த அரச படையினரை பழிவாங்கும் வகையில் ஆளும்தரப்பு செயற்படுகிறது. முன்னாள் கடற்படைத்தளபதி சிறையில் உள்ளார்.

செப்டெம்பர் 8 மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறவுள்ள நிலையில்தான் இவ்வாறான கருத்துக்களை அரசுத் தலைவர் வடக்கில் குறிப்பிட்டுள்ளார். சுயாதீன குற்றப்பத்திர அலுவலகத்தை உருவாக்குவதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் ஊடாக அரசபடையினர் இலக்கு வைக்கப்படுவார்கள்.

நாட்டின் ஒற்றையாட்சி மற்றும் இறையாண்மையைப் பாதுகாத்த அரச படையினரை சர்வதேச மட்டத்தில் காட்டிக் கொடுப்பதற்கு ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. இலங்கைக்கு எதிராக இம்முறை உறுப்பு நாடுகள்கொண்டுவரும்பிரேரணைதொடர்பில் ஆளும்தரப்பு வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும் என்றார்.

## சீர்திருத்தங்களைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையரின் சமீபத்திய அறிக்கையை முழுமையாக நிராகரித்துள்ள ஆளும்தரப்பு, சீர்திருத்தங்களைச் செயற்படுத்துவதில் வெளிப்புறத் தலையீடுகள் எதையும் ஏற்க முடியாது என்றும் தெரிவித்துள்ளது.

இலங்கையின் போர்க் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் சர்வதேசப் பொறிமுறையைவலியுறுத்திவரும்நிலையில், அத்தகைய சர்வதேச பொறிமுறைகளை நிராகரித்திருக்கும் இலங்கை ஆளும்தரப்பு உள்ளூர் பொறிமுறைகள் மூலம் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையரின்அறிக்கைக்குவழங்கியுள்ள பதிலிலேயேஆளும்தரப்புஇந்தவிடயங்களைத் தெரிவித்துள்ளது.

இலங்கை மக்கள் அனைவரது உரிமைகளையும்உறுதிப்படுத்தி,அமைதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சீர்திருத்தங்களைச்செயற்படுத்தக்காணப்படும் வாய்ப்புக்கள் என்று உயராணையர் அடையாளப்படுத்தியுள்ளவற்றை ஏற்றுக்கொண்டாலும் சர்வதேசத் தலையீடு சர்வதேசப் பொறிமுறை என்பவற்றை அது முற்றிலுமாக நிராகரித்துள்ளது.

சீர்திருத்தங்களில்முன்னேற்றத்தைக்காட்ட வெளித் தலையீடுகள் இல்லாத வகையில் போதிய கால அவகாசம் தேவை என்றும் ஆளும்தரப்பு வலியுறுத்தியுள்ளது.

'வெளிப்புற முயற்சிகள் தொடர்ச்சியான தேசிய முயற்சிகளுக்கு தடையாக மட்டுமே செயல்படும் மற்றும் மக்களைத் துருவ மயப்படுத்திப் பிளவுபடுத்தும் அபாயத்தைக் கொண்டிருக்கும்' என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது,

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான ரோம் உடன்படிக்கையில் கையெழுத்திடும்படி ஐ.நா. உயராணையர்விடுத்தஅழுத்தத்தையும் ஆளும்தரப்பு நிராகரித்துள்ளது.

# சர்வதேச மன்றங்களில் இலங்கைக்கு ஆதரவு என்று இத்தாலி உறுதியளிப்பு

ஐரோப்பிய ஒன்றியத்துடன் தற்போதுள்ள உறவுகளை மேலும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய இத்தாலியின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான பிரதி இராஜாங்க செயலாளர் மரியா திரிபோடி சர்வதேச மன்றங்களில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாகவும் உறுதியளித்தார்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் இத்தாலியின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான பிரதி இராஜாங்க செயலாளர் மரியா திரிபோடி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை அலரி மாளிகையில் நடைபெற்றது.

அரசியல் கலந்துரையாடல் களுக்கான வாய்ப்பை அதிகரிப்பது, வர்த்தகமற்றும்முதலீட்டுஒத்துழைப்பை விரிவுபடுத்துவது,சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது மற்றும் கலாசார மற்றும் கல்விப் பரிமாற்றங்களை வலுப்படுத்துவது குறித்து இச்சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டது.

பலமான பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல், மக்களின் நம்பிக்கையைஉறுதிப்படுத்துதல்மற்றும் ஊழலற்ற ஒரு நிலையான தேசத்தை முன்னேற்றுவதற்கான தற்போதைய ஆளும்தரப்பின்வேலைத்திட்டம்குறித்து பிரதமர் இதன்போது வலியுறுத்தினார்.

ஐரோப்பிய ஒன்றியத்துடன் தற்போதுள்ளஉறவுகளைமேலும்வலுப் படுத்துவதன் முக்கியத்துவத்தையும், இத்தாலியுடனானநீண்டகாலநட்டைப் பாராட்டியும் சர்வதேச மன்றங்களில் இலங்கைக்கு ஆதரவளிப்பது குறித்தும் பிரதம மந்திரி கருத்துத் தெரிவித்தார். இலங்கையின் அண்மைய முன்னேற்றங்களை திரிபோடி பாராட்டினார்.

அத்துடன் தற்போதைய வேலைத்திட்டங்களுக்கு இத்தாலியின் தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்கான இத்தாலிய தூதுவர் டாமியானோ பிராங்கோவிக் உள்ளிட்ட இத்தாலிய அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்திய சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினர், பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகாவத்த, வெளிநாட்டு அலுவல்கள்,வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சுகீஷ்வர குணரத்ன, அதே அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கப் பிரிவின் பணிப்பாளர் இசூரிகா கருணாரத்ன ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கலந்துரையாடித் முடிவுகளை எடுக்கவேண்டும் ஆளும்தரப்பு

## மின்சார சபை விடயத்தில் ஐக்கிய மக்கள் சக்தி அறிவுரை

இலங்கை மின்சாரசபை ஏனைய அரச நிறுவனங்களைவிட அதிக இலாபமீட்டும் நிறுவனமாகும். ஆனால் ஆளும்தரப்பு அதன் பணியா ளர்கள் பாதிக்கப்படும் வகையில் தீர்மானங்களை எடுத்துள்ளது. இவ்வாறு தன்னிச்சையாக தீர்மானங் களை எடுக்காது மின்சாரசபை உத்தியோகத்தர்களுடன்கலந்துரையாடி அதற்கமைய தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர் களிடம் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின்சாரசபையை மறுசீரமைப்பதை யாரும் எதிர்க்கவில்லை. எவ்வாறி ருப்பினும் அதற்கான முறையான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இந்த ஆளும்தரப்பு தோல்விய டைந்துள்ளது. மாறாக 23 000 மின்சாரத்துறை ஊழியர்களும் பாதிக்கப்படும் வகையிலான தீர்மானங்களையே ஆளும்தரப்பு எடுத்துள்ளது. லெகோ நிறுவனம் நாட்டின் ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் சிறந்த இலாபமீட்டும் அரச நிறுவனமாகும்.

ஊழியர்களுடன்வெளிப்படையாக கலந்துரையாடி ஆளும்தரப்பு இது குறித்து தீர்மானத்திருக்க வேண்டும். அன்று மின்சாரசபையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு எதிர்ப்பினை வெளியிட்ட ஜே.வி.பி. மின்சாரசபை தொழிற்சங்கங்கள் இன்று அனைத்து அங்கத்தவர்களையும் கைவிட்டு தன்னிச்சையாக தீர்மானங்களை எடுத்துள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டால் ஆளும்தரப்பு தனது தீர்மானமே சரியானது என உறுதியாகக் கூறுகிறது.

இடம்பெறும் மாற்றங்கள் நியாயமானவையாக இருக்க வேண்டும். மேலும்அவைவெளிப்படை தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். மாற்றங்கள் துரிதமாக இடம்பெற வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் அவை நாட்டுக்கு உகந்தவையாக இருக்க வேண்டும். இதனை வலியுறுத்துவதற்காகவே மின்சாரசபை ஊழியர் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். ஆளும்தரப்பு அவர்களின் குரலுக்கு செவிமடுக்க வேண்டும் என்றார்.

பதிலாக, இனம், மதம், வர்க்கம் அல்லது சாதி அடிப்படையில் பிளவுகள் அல்லது பாகுபாடுகள் இல்லாமல் மக்களின் பன்முகத்தன்மையை மதிக்கும் மற்றும் கொண்டாடும் ஒரு தேசத்தை கட்டியெழுப்புவதற்கான மக்களாணை தனக்கு இருக்கிறது என்று ஆளும்தரப்பு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# உள்நாட்டு பொறிமுறை என்பது வெறும் ஏமாற்று வேலை மட்டுமே

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகம் (OHCHR) சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையை இலங்கை ஆளும்தரப்பு மீண்டும் ஒருமுறை நிராகரித்துள்ளது. அதேசமயம் உள்நாட்டு பொறிமுறைகளின் ஊடாகவே மாற்றுத் திருத்தங்களை முன்னெடுத்து நாட்டின் ஒட்டுமொத்த மக்களுக்குமான நலனையும் உரிமைகளையும் வலுப்படுத்துவோம் என்ற வாக்குறுதியை ஆளும்தரப்பு வழங்கியுள்ளது. வெளிநாட்டு தலையீடுகள் தேவையில்லை என்றும் அவை முன்னெடுக்கப்படும் செயல்முறைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் என்றும் ஆளும்தரப்பு தன் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அரசு முன்வைத்துள்ள இந்தக் கருத்துகள், பன்னாட்டு சமூகத்தையும் உள்நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களையும் பெரிதும் ஏமாற்றுகின்றன என்பது வெளிப்படையானது. ஏனெனில், கடந்த பல தசாப்தங்களாகவே உள்நாட்டு பொறிமுறைகளில் தீர்வு கிடைக்கும் என்ற பெயரில் மக்கள் காத்திருக்கின்றனர். ஆனால் அதிலிருந்து ஒருபோதும் நேர்மையான முடிவுகள் வெளிப்படவில்லை. மாறாக, மீண்டும் மீண்டும் வாக்குறுதிகள் வழங்கப்பட்டும் அவை அனைத்தும் காற்றில் பறந்துவிட்டன.

இந்த ஆளும்தரப்புக்கூட அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பே அரச படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமாட்டோம் என்று சிங்கள மக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருக்கிறது. அப்படியிருக்கும்போது தமிழ் மக்கள் உள்நாட்டுப் பொறிமுறையில் எப்படி நம்பிக்கை கொள்ளமுடியும்?

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் வெறும் பொருளாதார சிக்கல்களோ அல்லது அபிவிருத்தி குறைபாடுகளோ அல்ல. அவை அடிப்படையில் அரசியல் உரிமைகள், சுயாட்சி, நீதி, சமத்துவம் ஆகியவற்றுடன் தொடர்புடையவையாகும். போர் முடிந்த பின்பும் காணாமல்போனோரின் விடயம், அரசியல் கைதிகளின் விடுதலை, காணி உரிமைகள், காவல்துறை அதிகாரங்கள், மாகாண சபைகளின் முழுமையான செயல்பாடு போன்ற தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இந்த கோரிக்கைகளுக்கு எந்தவொரு உள்நாட்டு பொறிமுறைகளும் உண்மையான தீர்வுகளை வழங்கவில்லை. வழங்கப்போவதுமில்லை. காரணம் இவை சிங்களப் பெரும்பான்மை வாக்காளர்களின் கருத்துக்கு எதிரானது என்பதாகும்.

இலங்கை ஆளும்தரப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் 'இனம், மதம், வர்க்கம், சாதி என்பனவற்றின் அடிப்படையில் பிரிவுகள் இன்றி அனைவரையும் ஒரே மாதிரியாக மதிக்கும் தேசத்தை உருவாக்குவோம்' என்று கூறியுள்ளது. ஆனால் நிலவரம் அதற்கு முற்றிலும் முரணானது. வடக்கு கிழக்கில் நிலவும் நிலைமை அங்குள்ள மக்களுக்கு இன்னும் பாதுகாப்பின்மை, பயம், பொருளாதார சிக்கல்கள், நீதியின்மை எனும் வலிகளைத் தருகின்றது. அரசின் வார்த்தைகள் உண்மையான வாழ்க்கை அனுபவங்களுடன் இணைந்துபோகாமல் உள்ளன.

இந்நிலையில், பன்னாட்டு சமூகத்தின் அழுத்தமின்றி, மனித உரிமை மீறல்களை வெளிச்சத்திற்கு கொண்டுவராமல், பொறுப்புக்கூறலை வலியுறுத்தாமல், இலங்கை அரசு தன்னிச்சையாகவே முன்னேற்றங்களைச் செய்யும் என்று நம்புவது முற்றிலும் பாவனையற்ற ஒன்று. காரணம், கடந்த கால அனுபவங்கள் காட்டியதுபோல, ஆளும்தரப்புகள் தங்களைச் சுத்திகரித்துக்கொள்ளும் முயற்சியாகவே உள்நாட்டு பொறிமுறைகளைப் பயன்படுத்தியுள்ளன.

ஆளும்தரப்பு 'போதிய காலமும், வெளிநாட்டு தலையீடு இல்லாத சூழலையும்' கேட்டுக்கொள்கிறது. ஆனால் தமிழ் மக்கள் ஏற்கனவே பல தசாப்தங்களாகக் காத்திருக்கின்றனர். மேலும் காலம் கேட்பது மக்களை மீண்டும் மீண்டும் ஏமாற்றும் சூழலையே உருவாக்கும். உண்மையான தீர்வுக்கான வழி, பன்னாட்டு கண்காணிப்பு, சர்வதேச பங்கேற்பு, பாதிக்கப்பட்ட மக்களுடன் நேரடி கலந்துரையாடல் ஆகியவற்றின் வழியாக மட்டுமே அமையும்.

எனவே, இலங்கை ஆளும்தரப்பு முன்னிறுத்தியுள்ள நிலைப்பாடு தவறானது மட்டுமல்லாமல் கண்டிக்கத்தக்கதுமாகும். இது பாதிக்கப்பட்ட மக்களின் வலிகளை அலட்சியப்படுத்துவதாகும். உள்நாட்டு பொறிமுறைகளில் நேரம் வீணடிப்பது வீண் விரயம் மட்டுமே. தமிழ் மக்களுக்கு நீதியும் உரிமைகளும் கிடைப்பதற்கான ஒரே வழி, பன்னாட்டு பங்கேற்பு மற்றும் அழுத்தத்தின் ஊடாகவே சாத்தியமாகும் என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது.

# எமது கட்சிப் பணியிடத்தை தாக்கும் முடிவை ஜே.வி.பியின் மத்திய செயற்குழுவே எடுத்தது

## முன்னிலை சோசலிசக் கட்சி குற்றச்சாட்டு

எமது கட்சிப் பணியிடம் மீது தாக்குதல் நடத்த ஜேவிபியின் மத்திய செயற்குழுவே தீர்மானம் எடுத்தது. இந்த மத்திய செயற்குழுவே நாட்டின் எதிர்காலம் தொடர்பில் அரசியல் தீர்மானங்களையும் எடுக்கிறது. அதனாலே ஆளும்தரப்பின் இந்த மாசமான செயற்பாடுகளுக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும் என தெரிவிக்கிறோம் என முன்னிலை சோசலிச கட்சி மத்திய செயற்குழு உறுப்பினர் சுஜித் குறுவிட்ட தெரிவித்தார்.

நுகேகொடையில் அமைந்துள்ள முன்னிலை சோசலிசக் கட்சிப் பணியிடத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கம்பஹாவில் அமைந்துள்ள எமது கட்சிப் பணியிடத்தின் மீது தாக்குதல் நடத்தி அதனை கைப்பற்றிக்கொள்ள வேண்டிய தேவை உண்மையிலேயே ஆளும்தரப்புக்கு இல்லை. மாறாக இந்த தாக்குதலில் ஆளும்தரப்பு எமக்கு ஒரு எச்சரிக்கையை விடுத்திருக்கிறது. அதாவது, நீங்கள் எங்களுக்கு எதிராக செயற்பட்டால், இவ்வாறுதான் நாங்கள் உங்களை அடக்குவோம் என்ற செய்தியையே வழங்கி இருக்கிறது.

நீதிமன்ற அதிகாரம், பொலிஸ் அதிகாரம் அனைத்தையும் ரில்வின் சில்வா தற்போது பயன்படுத்தத் தொடங்கியிக்கிறார். ஜே.வி.பி. இந்த வழியில்தான் முன்னுக்கு செல்வதாக இருந்தால் அது பாரதூரமான நிலைமையாகும். வாக்களித்த மக்களின் அபிலாசைகளுக்கு எதிராகவே ஆளும்தரப்பு தற்போது செயற்பட்டு வருகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் வீழ்ச்சியடைந்த பொருளாதார நிபந்தனைகளை மேற்கொள்ளல், இலங்கையின் காணிகளை இந்தியாவுக்கு வழங்கல், அரச நிறுவனங்களை துண்டாக்கி விற்பனை செய்தல், போன்ற விடயங்களை மேற்கொள்வதே ஆளும்தரப்பின் நோக்கமாக இருக்கிறது.

ஆனால் மக்களின் எதிர்ப்புடன் இவற்றை மேற்கொள்ள முடியாது. அதனால் அடக்குமுறை மற்றும் குண்டர்களின் பலத்தை பயன்படுத்திக்கொண்டு மக்கள் எதிர்ப்பை அடக்குவதற்கு இவர்கள் முயற்சிக்கின்றனர். என்றாலும் நாங்கள் முன்னிலை சோசலிச கட்சியாக நாட்டு மக்களுடன் இணைந்து, இந்த அடக்குமுறைக்கு எதிராக போராடுவோம். அரசியல் செய்யும் உரிமை எங்கள் அனைவருக்கும் இருக்கிறது.

ஆளும்தரப்பின் அச்சுறுத்தல்களுக்கு பயந்து, இந்த வீழ்ச்சியடையும் கொள்கையை கண்களை மூடிக்கொண்டு பார்த்துக்கொண்டிருக்க நாங்கள் தயார் இல்லை. ஏனெனில் எமது கட்சி காரியாலயம் மீது தாக்குதல் நடத்த மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய செயற்குழுவே தீர்மானம் எடுத்தது. இந்த மத்திய செயற்குழுவில் ரில்வின் சில்வா, அநுர திஸாநாயக்க, விஜித்த ஹேரத், பிமல் ரத்நாயக்க ஆகியோர் அமருகின்றனர். இந்த மத்திய செயற்குழுவே நாட்டின் எதிர்காலம் தொடர்பில் அரசியல் தீர்மானங்களை எடுக்கிறது. அதனாலே ஆளும்தரப்பின் இந்த மாசமான செயற்பாடுகளுக்கு எதிராக ஒன்றிணைவோம் என கூறுகிறோம் என்றார்.

# முன்னிலை சோசலிச கட்சி அலுவலகம் தாக்கப்பட்டதற்கு வாசுதேவ கண்டனம்

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் அமைச்சர்கள் சிலர் சட்டத்தையும் அதிகாரத்தையும் கையில் எடுத்துக்கொண்டு முன்னிலை சோசலிச கட்சி செயற்பாட்டாளர்களை தாக்கிய ஜனநாயக விரோத செயலை வன்மையாக கண்டிக்கிறோம் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குறிப்பிட்ட காலத்தில் இருந்து முன்னிலை சோசலி கட்சியின் காரியாலயமாக முன்னெடுத்துச்செல்லப்பட்ட கம்பஹாயக்கல அலுவலகம், அதன் உறுப்பினர்களின் அரசியல் பிளவுடன் வெளிப்பட்டிருந்த இந்த காரியாலயத்தின் சட்ட ரீதியிலான உரிமை தொடர்பில் நீதிமன்ற தீர்ப்பொன்றின் மூலம் மக்கள் விடுதலை முன்னணிக்குரியது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இருக்கையில், சட்டத்தின் உரிமையை தங்களின் கைகளில் எடுத்துக்கொண்டு பலவந்தமான அதிகாரமாக தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரினால், கடந்த வாரம் குண்டர்களின் அதிகாரத்தை பயன்படுத்திக்கொண்டு, அந்த காரியாலயத்தில் தங்கிருந்த முன்னிலை சோசலிச கட்சி செயற்பாட்டாளர்களை தாக்கி, அவர்களை விரட்டியடித்து, அந்த நிலையத்தை மக்கள் விடுதலை முன்னணியின் சிலர் கைப்பற்றிய முறை, முற்றாக சட்டத்துக்கு முரணான, ஜனநாயக விரோ த, மேலாதிக்கமாக அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளதாகவே காண்கிறோம்.

இந்த ஜனநாயக விரோத செயற்பாடை நாங்கள் முற்றாக கண்டிக்கிறோம். இது அரச அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்திக்கொண்டு மேற்கொண்டிருக்கும் தன்னிச்சையான செயற்பாடாகவே பார்க்கிறோம்.

நீதிமன்றத்தினால் வழங்கப்படுகின்ற தீர்ப்பொன்றை செயற்படுத்தும்போது அதற்கு சட்ட ரீதியிலான செயல் முறையொன்று இருக்கிறது என்பதை தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் பிரதானிகள் தெரியாமல் இருக்க முடியாது. ஆளும்தரப்பின் அமைச்சர்கள் சிலர் சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக்கொண்டு நீதிமன்ற உத்தரவை கண்டுகொள்ளாது தன்னிச்சையாக செயற்பட்டிருப்பதாகவே மக்களுக்கு இதன் மூலம் தெளிவாகிறது.

அதனால் உடனடியாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் இதுதொடர்பான பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஜனநாயக விரோதமாக செயற்பட்ட அரசியல் பிரபலங்களுக்கு எதிராக, அரசியல் ரீதியாகவே தண்டை வழங்கி, நாட்டில் இருக்கும் ஜனநாயகத்துக்கும் சட்டத்துக்கும் சார்பாக ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கிறது என்பதை மக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அத்துடன் இந்த பிழையான நடவடிக்கையை உடனடியாக சரி செய்வதற்கு ஆளும்தரப்பின் அரசியல் தலைவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என தெரிவத்துக்கொள்கிறோம். தேசிய மக்கள் சக்தியின் தாக்குதல் தொடர்பில் சட்டம் செயற்படுத்தப்படுகிறதா என மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இழப்பீடு வழங்க நிதியம் முடிவு

எல்ல-வெல்லவாய பிரதான வீதியில் நேற்று முன்தினம் (04) இரவு இடம்பெற்ற பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களுக்காக இழப்பீடு வழங்க அரசுத் தலைவர் நிதியம் தீர்மானித்துள்ளது .

இதற்கமைய விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு தலா 10 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்க அரசுத் தலைவர் நிதியம் தீர்மானித்துள்ளதாக அரசுத் தலைவர் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

அரசுத் தலைவர் நிதியத்தின் தலைவர் உட்பட நிதியத்தின் உறுப்பினர்கள் அரசுத் தலைவர் செயலகத்தில் நேற்று கூடி கலந்துரையாடியுள்ளார். அரசுத் தலைவர்யால் விடுக்கப்பட்ட பணிப்புக்கமைய இந்த இழப்பீட்டை வழங்க அரசுத் தலைவர் நிதியம் தீர்மானித்துள்ளது.

வியாழக்கிழமை இடம்பெற்ற இவ்விபத்தில் 15 பேர் உயிரிழந்த நிலையில் 19 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


Semba Services (Pvt) Ltd
விமான நிலைய போக்குவரத்து
மற்றும் சுற்றுலா ஏற்பாடுகள்
மேலதிக விபரங்களுக்கு
+94 77 3078 799
நாடுமுழுவதும்
• நட்சத்திர விடுதிகளில் தங்குமிட வசதி
• சுற்றுலா ஒழுங்கமைப்பு வசதிகள்
• போக்குவரத்து வசதிகள்
#551A, kasthuriyar Road, Jaffna.
#45A, Pennyquick Lane, Colombo 05


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
•CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு 2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.09.2025இல் வெளியிடப்பெற்றது